1971 டிசம்பர் 9]

possible to issue instructions through the department to the I.D. Hospital to collect the patients immediately. Even if it is not a positive case, if it is one of vomitting, such case also needs hospitalisation and the hospital authorities must collect such patients also and give them treatment.

THE HON. THIRU K. ANBAZHAGAN : As a doctor, I do not expect Mr. Hande to put such a question. Because even when there are instructions, in the actual implementation, everywhere there is some difficulty. Everywhere there is some delay. Even if there is a van, either the driver or the engine either one of these things becomes sick or under repair. This season is more or less over and therefore, the problem has to be tackled only in the next season.

3. தன்னிலை விளக்கம்

திரு. க. சுப்பு அவர்கள் அளித்த தன்னிலை விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது சட்டப் பேரவை விதிகள்—81-வது விதியின் கீழ் உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் ஒரு தன்னிலை விளக்கத்தை அளிப்பார்கள். அவர்கள் தன்னிலை விளக்கம் அளிக்கும்பொழுது விவாதத்திற்குரிய பிரச்னை எதையும் எழுப்பக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று நான் கொடுத்த ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் மீது பதிலளித்துப் பேசும்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் அவர்களுடைய குலத்தைப்பற்றிக் குறைத்துப் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே நான் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியும் அடையக்கூடிய செய்தியாக இருந்தது. நான் மாத்திரமல்ல, நான் சார்ந்திருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் யாருமே எந்தக் குலத்தையும் குறைத்துப் பேசுவது கிடையாது. அப்படி நான் பேசியதாக முதல் அமைச்சர் அவர் களுக்கு யாரோ தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். நான் எந்த அளவுக்கு வருத்தப்படுகிறேனோ அந்த அளவுக்கு அவர் களுக்கும் வருத்தம் இருந்திருக்கும் என்பதை உணர்கிறேன். நாங்கள் ஜாதியைப்பற்றிப் பேசுவதில்லை. எங்களைப் பொறுத்த வரையில் மனித குலம் ஒரே குலம்தான், அந்தக் குலத்திலேதான் முதல்வர் அவர்களையும் சேர்த்து வைத்திருக்கிறோமே தவிர வேறு எந்தத் தவறான கருத்தையும் நாங்கள் வைத்திருக்கவில்லை. எனவே எந்தவிதமான தவறான கருத்தையும் அவர்கள் வைத்திருக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியின் சமுதாயக் கொள்கையைப்பற்றி திரு. சுப்பு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைக்குப் புறம்பாக நடந்துகொள்வதில்லை என்று சொன்னார் கள். அவர்கள் அப்படிப் பேசக்கூடாது என்பதை நான் அவர்கள் விளக்கத்தின் மூலமாகப் புரிந்துகொண்டிருக்கிறேன்.